**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண். 28/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சங்கர் | மதம் | : இந்து |
| த/பெ | : முனுசாமி | ஜாதி | : -- |
| வயது | : 49 | கிராமம் | : காவேரிராஜபுரம் |
| தொழில் | : நடத்துனர் | வட்டம் | : திருத்தணி |

3.12.2024

**வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் வீடு கிரையம் வாங்கியுள்ளேன். அந்த வீட்டில் அத்துமீறி நுழைந்து கொண்டு என்னை வெளியே போக சொன்னார்கள். எனவே வழக்கை தாக்கல் செய்தேன். தற்போது பிரதிவாதிகள்தான் வழக்கு சொத்தில் உள்ளார்கள் என்றால் ஆமாம். தாவா சொத்தில் குடிசை வீடு இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. சுற்றிலும் சுற்றுச்சுவர்தான் இருந்தது.

2. நான் சொல்வது பொய் என்றாலும் வழக்கு சொத்தில் குடிசை வீடு இருந்தது என்றாலும் அந்த குடிசை வீட்டையும் பிரதிவாதிகள்தான் கட்டினார்கள் என்றாலும் இல்லை. வழக்கு சொத்தில் ஏற்கனவே குடிசை வீடு இருந்ததா என்றால் இல்லை. நானும் பிரதிவாதிகளும் ரத்த உறவு என்றால் சரிதான். என் அப்பா முனுசாமியும் 1ம் பிரதிவாதி துரையும் உடன் பிறந்தவர்கள். எனக்கு வீடு கிரையம் கொடுத்த சுலோச்சனாவின் கணவர் சந்திரகேஷ் என்ற ராமசந்திரன் என்ற சந்திரன் எனது சித்தப்பா ஆவார். என் அப்பா உடன் பிறந்த தம்பி ஆவார். சந்திரகேஷ் என்ற ராமசந்திரன் என்ற சந்திரன் பெங்களூருவில் நிரந்தரமாக குடியேறிவிட்டார் என்றால் சரிதான்.

3. அவர் உயிருடன் இருந்த போது தாவா சொத்தில் குடிசை போட்டு பிரதிவாதிகள் அனுபவித்து வந்தார்கள் என்றாலும் சந்திரகேஷ் என்ற ராமசந்திரன்

என்ற சந்திரன் பெங்களூருவில் இருந்து வந்து போகும்போது அந்த குடிசை வீட்டில்தான் தங்கியிருப்பார் என்றாலும் சந்திரகேஷ் என்ற ராமசந்திரன் என்ற சந்திரன் தான் குடிசை வீடு கட்டி வந்து போவார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சந்திரகேஷ் என்ற ராமசந்திரன் என்ற சந்திரன் இருக்கும்போதே அவர் சம்மதத்துடன் பிரதிவாதிகள் குடிசை வீடு கட்டி அனுபவித்து வந்தனர் என்றால் இல்லை. வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் புல எண்.105/11A ஆகும். அதன் விஸ்தீரணம் 807 சதுரடி ஆகும்.

4. சந்திரகேஷ் என்ற ராமசந்திரன் என்ற சந்திரன் எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு நினைவில் இல்லை. நானும் தாவா சொத்திற்கு அருகில்தான் குடியுள்ளேன் என்றால் ஆமாம். சந்திரகேஷ் என்ற ராமசந்திரன் என்ற சந்திரன் உயிருடன் இருக்கும்போதே 2012 ல் முனுசாமிக்கு கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது.கிரைய ஒப்பந்தம் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் இந்த வழக்கிற்கு வந்த பின்புதான் தெரியும். சந்திரகேஷ் என்ற ராமசந்திரன் என்ற சந்திரன் 30.07.2012 ல் ரூ.15,000/- பெற்று கொண்டு முனுசாமிக்கு கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்து சுவாதீனம் கொடுத்துவிட்டார் என்றாலும் மேற்படி விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் இல்லை.

5. எப்போது வந்தாலும் கிரையம் செய்து கொடுப்பதாக சரத்து எழுதப்பட்டுள்ளது என்றாலும் முழு கிரைய தொகையையும் பெற்று கொண்டு கிரைய ஒப்பந்தம் எழுதி சுவாதீனத்தை ஒப்படைத்துவிட்டார் என்றால் இல்லை. தாவா சொத்தில் குடிசை வீடு இருந்ததை பிரதிவாதிகள் அகற்றிவிட்டு சிமெண்ட் சீட்டு போட்டுள்ளார்கள் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் இல்லை. சந்திரகேஷ் என்ற ராமசந்திரன் என்ற சந்திரன் உயிருடன் இருந்தபோது நான் அவரது பங்கை வேண்டும் என எப்போதாவது கேட்டுள்ளேனா என்றால் இல்லை.

6. சந்திரகேஷ் என்ற ராமசந்திரன் என்ற சந்திரன் உடைய பங்கை பிரதிவாதிகளுக்கு கொடுத்துவிட்டதால் அதை அவர் கிரையம் கொடுக்க மாட்டார் என்பதால்தான் அவர் இருக்கும்போது நான் கேட்கவில்லை என்றால் இல்லை. தாவா சொத்து ஏற்கனவே கிரைய ஒப்பந்தம் போட்டு சுவாதீனம் கொடுத்த நிலையில் நான் வாரிசுகளை அணுகி கிரையம் பெற்றுள்ளேன் என்றால் நான் வற்புறுத்தவில்லை. நான் 2ம் வாதி திலீப் குமாரை நான் வளர்த்து வந்தேன். சந்திரகேஷ் என்ற ராமசந்திரன்

என்ற சந்திரன் இறந்த பின்பு உறவு முறைகள் அமர்ந்து பேசும்போது அந்த இடத்தை 2ம் வாதிக்கு கிரையம் கொடுப்பதாக சொன்னார்கள். அதன் பேரில் கிரையம் வாங்கப்பட்டது.

7. உண்மையிலேயே எனக்கு 2ம் வாதி மீது பாசம் இருந்தால் என் சொத்தை கொடுத்திருப்பேன் என்றாலும் ஏற்கனவே வேறொருவருக்கு கிரையம் பேசி சுவாதீனம் கொடுத்த சொத்தை கேட்டு இருக்கமாட்டேன் என்றால் சரியல்ல. நான் அங்கேயே குடியிருப்பதால் பிரதிவாதிகள் குடியிருப்பதும் கிரைய ஒப்பந்தம் செய்திருப்பதும் தெரிந்து நான் வாங்கியுள்ளேன் என்றாலும் எனவே எனது கிரையம் செல்லாது என்றாலும் அங்கு எந்த வில்லங்கமும் இல்லை என்றுதான் கிரையம் வாங்கினேன். நான் சிமெண்ட் சீட்டு போட்ட பின்பு பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் அது தவறு.

8. பிரதிவாதிகள் எனக்கு எந்த நஷ்டயீடும் தர தேவையில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தான் இன்றுவரை கூரை வீட்டிற்கு வரி கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. இன்றுவரை நான்தான் வரி செலுத்தி வருகிறேன். நான் வரி செலுத்தியதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஏற்கனவே கிரைய ஒப்பந்தம் செய்திருப்பது தெரிந்து நான் வாங்கியுள்ளேன் என்றாலும் எனவே எனது கிரையம் செல்லாது என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை 4, 5 பிரதிவாதிகள் தரப்பு ஒத்திவைக்கப்படுகிறது)